[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) சென்னை மாநகரில் ஏற்கனவே உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி நிலையங்களைத் தவிர வேறு எதுவும் தொடங்க உத்தேசம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Mylapore Hindu Permanent Fund

* 47 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon the Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether there were any labour troubles in the Mylapore Hindu Permanent Fund during the early months of 1970 ;

(*b*) if so, he details thereof; and

(*c*) the action taken thereon ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) தொழிலாளர்களால் எந்தத் தொழில் தகராறும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு எந்தப் புகார்களும் அல்லது முறையீடு களும் செய்து கொள்ளப்படவில்லை.

(இ) & (உ) இவ்விஞக்கள் எழவில்லை.

திருமங்கலம் பேரூராட்சி.

* 48 விஞ.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் பேரூராட்சி, நகராட்சியாக உயர்த்தப் படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் ஓர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனுல் மத்திய அரசின் மக்கட் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் தற்போது மக்கட் தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக ஓர் தடை விதித்து இருப்பதால், மாநில அரசு உடன் செயலாற்ற வேண்டி இராததும், அவசியமற்றது மான செயற்குறிப்புகளை, தள்ளிவைக்குமாறு மாநில அரசை கேட்டுக் கொண்டமையால், திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பை, மாநில அரசு, தற்போதைக்கு தள்ளி வைத்துள்ளது. மத்திய அரசின் மக்கட்தொகை கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட தடையை நீக்கின உடன் ஆவன செய்யப்படும்.

ரேஷன் கடை வியாபாரிகள்.

* 49 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு, உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடை யளிப்பாரா—

ரேஷன் விதிகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்ற காரணத் துக்காக 1969-ம் ஆண்டு, ஜனவரி முதல் இதுவரை எத்தனை ரேஷன் வியாபாரிகளது லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளது?

1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டபூர்வ பங்கீட்டு முறை அமலிலிருந்த சென்னை மாநகரில் 8 பங்கீட்டு வியாபாரிகளின் அனுமதியும், கோயம்புத்தூரில் 2 பங்கீட்டு வியாபாரிகளின் அனுமதியும் இதுவரை ரத்து செய்யப்பட்டன. சட்டபூர்வமற்ற பங்கீட்டு முறை அமலிலிருந்த ஏனைய மாவட்டங்களில் 56 பங்கீட்டுக் கடைக்காரர்களின் அனுமதி ரத்து செய்யப்பட்டன.

Supply of steel for Furniture Manufacturers

*50 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether he has received a Memorandum, dated 2nd April 1970 from the Steel Furniture Manufactures Association, Coimbatore; and

(b) if so, the details thereof and the steps taken to ensure reghlar and proper sdpply of their steel requirements?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அவையின்முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: Sir, may I know whether it is a fact that many of these manufacturers are finding it difficult to go along with their work as they are not getting adequate quota and a number of people are likely to be thrown out of employment and if so, whether this Government have of late taken any drastic steps to see that they get the quota. Also, whether they will examine their grievances and do the needful in the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கவேண்டிய மூலப்பொருட்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை நம்முடைய அரசு உணர்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசாங்கமும் அடிக்கடி இதைபற்றிப் பரிசீலனை செய்து தேவையான மூலப்பொருட்களை, தேவையானல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு சிறு தொழிலதிபர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முன் வந்துள்ளது. அண்மையிலே 10 கோடி ரூபாய் அளவிற்கு நாடு முழுவதிலும் உள்ள சிறு தொழிலதிபர்கள் இரும்பு சம்பந்தப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்துகொள்வதற்கு அனுமதி அளித்திருப்பதை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, as far as the relief under the category of sales tax is concerned, our Government have denied their request. But what about the Central Excise Duty and which is the Government that are considering it, whether, it is our Government or that Government? If that Government is considering it—It is relevant—what is the exact reaction from the Central Government?

@ பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.